**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-28** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர்.திரு.மணிவாசகம் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 27th day of September 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். **1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல், **4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

நீதிமன்றக்காவலில் உள்ள **2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி உடல்நிலை சரியில்லாமல் திருச்சி**,** அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட காரணத்தினால்**,** அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய இயலவில்லை என திருச்சி மத்திய சிறை கண்காணிப்பாளர் க**.**எண்**. 481/**த**.**கு**.3/2023,** நாள்**. 27.09.2023** கடிதம் அனுப்பியுள்ளார்**.** மருத்துவமனையில் காணொலி வசதியில்லை**. 2** ம் எதிரி வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்**. 2** ம் எதிரி முன்னிலையில்லாமல்**,** சாட்சியம் பதிவு செய்ய ஆட்சேபனையில்லை என தெரிவித்ததின் அடிப்படையில்**,** சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**.**

**3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம்சார்ந்த மருத்துவத்துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று இதே மருத்தவமனையில், இதே பணியிலிருந்தபோது கரூர் நகர காவல்நிலைய கு.எண். 1031/2020 ச/பி. 302 இதச வழக்கில் தொடர்புடைய கிருஷ்ணமூர்த்தி, வயது 26 என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக கரூர், நகர காவல் ஆய்வாளர் வேண்டுகோளை பிற்பகல் 3.50 மணிக்கு பெற்றுக்கொண்டு, காவலர் ரவிக்குமார் அடையாளம் காட்ட, அன்றைய தினம் 3.55 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினேன்.

<u>பிரேதத்தில் காணப்பட்டவைகள் :-</u>

<u>உடைகள்</u> :- நீலம், கருப்பு, வெள்ளை நிற லுங்கி, காப்பி நிற ஜட்டி ஆகியவை இரத்தம் தோய்ந்து காணப்பட்டது.

பிரேதத்தில் மரணவிரைப்பு காணப்படவில்லை. மரணத்திற்கு பின்பான இரத்தஉறைகள் உடலின் பின்பகுதியில் லேசாக காணப்பட்டது. அழுகிய மாற்றங்கள் எதுவும் இல்லை.

<u>கீழ்க்கண்ட மரணத்திற்கு முன்பான காயங்கள் உடலில் காணப்பட்டன :-</u>

<u>வெட்டுக்காயங்கள் :-</u>

1. 13 x 1.5 x 2.5 cm அளவில் மூக்கின் கீழ்பகுதியிலும், இடது கன்னத்திலும் சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயம் திசுக்களையும், மேக்சிலா எலும்பையும் வெட்டியிருந்தது.

2. 4.5 x 1.5 x 0.25 cm அளவில் கீழ் உதட்டில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

3. 18 x 5.5 x மண்டையோடு ஆழம் அளவில் இடதுபக்க தலையிலும், கழுத்திலும் வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயம் திசுக்களையும், மண்டையோடு இரத்தநாளங்கள், நரம்புகள் ஆகியவற்றை வெட்டியிருந்தன.

4. 16 x 5.5 cm x மண்டையோடு ஆழம் அளவில் வலதுபக்க கன்னத்தில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயமானது வலது காது, வலது முகப்பகுதியின் திசுக்கள், கீழ்த்தாடை, மண்டையோடு, இரத்தநாளங்கள், நரம்புகள் ஆகியவற்றை வெட்டியிருந்தன.

5. 4 x 0.5 x 0.5 cm அளவில் உச்சந்தலையில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயமானது புருவத்திலிருந்து 11 செ.மீ. மேலாக காணப்பட்டது. திசுக்கள் வெட்டுப்பட்டிருந்தது.

6. 4.5 x 0.5 x 0.5 cm அளவில் உச்சந்தலையில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயமானது மேற்சொன்ன காயம் எண்.5 லிருந்து 2 செ.மீ. பின்பக்கமாக காணப்பட்டது. திசுக்கள் வெட்டப்பட்டிருந்தன.

7. 8.5 x 2.5 x மண்டையோடு ஆழம் அளவில் இடதுபக்க தலையில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயமானது இடது காதிலிருந்து 2.5 செ.மீ. மேலாக காணப்பட்டது. திசுக்கள் இடதுபக்க மண்டையோடு எலும்புகள் வெட்டப்பட்டிருந்தன.

8. 2.5 x 1.5 x 0.5 அளவில் இடதுபக்க தலையில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

9. 4.5 x 1.5 x 0.5 cm அளவில் இடதுபக்க தலையில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 7, 8, 9 காயங்கள் ஒன்றோடொன்று இணைந்திருந்தது. திசுக்கள் வெட்டப்பட்டிருந்தன.

10. 15 x 7.5 cm x மண்டையோடு ஆழம் வரை வெட்டுக்காயம் இடதுபக்க தலையில் காணப்பட்டது. அந்த காயமானது காயம் எண்.9 லிருந்து 8.5 செ.மீ. மேலாக காணப்பட்டது. திசுக்கள் இடதுபக்க மண்டையோடு எலும்புகள், இடதுபக்க மூளை வெட்டப்பட்டிருந்தன.

11. 4.5 x 1.5 x 0.5cm அளவிலான வெட்டுக்காயம் இடதுபக்க தலையில் காணப்பட்டது.

12. 2.5 x 1.5 x 0.5 cm அளவிலான வெட்டுக்காயம் இடதுபக்க தலையில் மேற்சொன்ன காயம் எண்.10 உடன் சேர்ந்திருந்தது. திசுக்கள் வெட்டப்பட்டிருந்தன.

13. 4.5 x 2.5 cm x எலும்பு ஆழம் வரை வெட்டுக்காயம் வலது முன்கையில் காணப்பட்டது. அந்த காயம் வலது முட்டியில் 15.5 செ.மீ. கீழாக காணப்பட்டது. திசுக்கள், இரத்தநாளங்கள், நரம்பு, அல்னா எலும்பு ஆகியவை வெட்டப்பட்டிருந்தன.

14. 4.5 x 1.5 x 0.5 cm அளவிலான வெட்டுக்காயம் வலது முன்கையில், மேற்சொன்ன காயம் 13 க்கு 2 செ.மீ. கீழாக காணப்பட்டது. திசுக்கள் வெட்டப்பட்டிருந்தன.

15. 6.5 x 1.5 x 0.5 cm அளவில் வலது கையின் வெளிப்புறத்தில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

16. 4.5 x 1.5 x 0.5 cm அளவில் வலது கையின் வெளிப்புறத்தில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

17. 1.5 x 1.5 x 0.5 cm அளவில் வலது கையின் வெளிப்புறத்தில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
18. 6.5 x 1.5 x 0.5 cm அளவில் வலது உள்ளங்கையில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
19. 7.5 x 0.5 x 0.25 cm அளவில் வலது உள்ளங்கையில் விரல்பகுதிகளில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
20. 4.5 x 0.5 x 0.25 cm அளவில் வலது உள்ளங்கை விரல்பகுதியில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டது.
காயம் எண். 19, 20 ஆகியவை திசுக்களையும், விரல் எலும்புகளையும் வெட்டியிருந்தன.
21. 12.5 x 4.5 cm x தசை ஆழம் வரையில் இடது கையில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயம் கை முட்டியிலிருந்து 8.5 செ.மீ. மேலாக காணப்பட்டது. அந்த காயம் திசுக்களையும், தசையையும் வெட்டியிருந்தது.
22. 4.5 x 1.5 x 0.25 cm அளவில் இடது முன்னங்கையில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
23. 4 x 1.5 x 0.25 cm அளவில் இடது முன்னங்கையில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
24. 4 x 1.5 x 0.5 cm அளவில் இடது முன்னங்கையில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
காயம் எண். 22, 23, 24 ஆகியவை திசுக்களை வெட்டியிருந்தது.
25. 4 x 1.5 x 4 cm அளவில் இடது மணிக்கட்டில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
அந்த காயமானது திசுக்கள், இரத்தநாளங்கள், நரம்பு, முன்கை எலும்புகள் இரண்டையும் வெட்டியிருந்தது.
26. 2.5 x 0.5 x 0.5 cm அளவில் இடது நடுவிரலில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
27. 2.5 x 0.5 x 0.5 cm அளவில் இடது சுண்டுவிரலில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
28. 4.5 x 1.5 x 0.5 cm அளவில் கழுத்தின் பின்பகுதியில் வெட்டுக்காயம் காணப்பட்டத.
அந்த காயமானது வலது தோள்பட்டையிலிருந்து 22.5 செ.மீ. உட்பக்கமாக காணப்பட்டது.
29. 5.5 x 1.5 x 0.5 cm வலது தோள்பட்டையில் பின்புறமாக வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயமானது தோள்பட்டையிலிருந்து 7 செ.மீ. கீழாக காணப்பட்டது.
30. 7.5 x 1.5 x 0.5 cm அளவில் இடது தோள்பட்டையின் பின்புறம் வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயமானது இடது தோள்பட்டையிலிருந்து 7.5 செ.மீ. கீழாக காணப்பட்டது.

31. 4.5 x 1.5 x 0.5 cm அளவிலான வெட்டுக்காயம் வலது தொடையில் காணப்பட்டது. அந்த காயமானது கால் முட்டியிலிருந்து 12 செ.மீ. மேலாக காணப்பட்டது. திசுக்கள் வெட்டப்பட்டிருந்தது.

சிராய்ப்பு காயங்கள் :-

32. 0.5 x 0.5 cm வலது புருவத்தில் காண்ப்பட்டது.

33. 1.5 x 0.5 cm இடது பக்க முகத்தில் காணப்பட்டது.

34. 2.5 x 2 cm அளவில் கீழ்உதட்டில் காணப்பட்டது.

35. 5 x 4 cm அளவில் வலது தோள்பட்டையில் காணப்பட்டது.

36. 4 x 2.5 cm அளவில் இடது தோள்பட்டையில் காணப்பட்டது.

37. 9 x 0.25 cm அளவில் கீறலான சிராய்ப்பு காயங்கள் இடது கையில் காணப்பட்டது.

38. 3 x 3 cm அளவில் வலது கால்முட்டியில் காணப்பட்டது.

பிற உறுப்புகள் :-

தலைத்தோல் இடதுபக்கமாக கன்றியிருந்தது. மூளை பக்கவாட்டிலும் பின்புறத்திலும், சிறுமூளையிலும் இரத்தக்கட்டுகள் காணப்பட்டன. மார்புக்கூட்டில் 20 மில்லி இரத்தம் கலந்த திரவம் காணப்பட்டது. வயிற்றுப்பகுதியில் 20 மில்லி இரத்தம் கலந்த திரவம் காணப்பட்டது. இருதயம் சீராக இருந்தது. நுரையீரலில் இரத்தம் காணப்பட்டது. இரைப்பையில் 200 கிராம் அளவில் பாதி செறித்த உணவு மஞ்சள் நிறத்தில் வேறு நெடியின்றி காணப்பட்டது. சவ்வு சீராக இருந்தது. சிறுகுடலில் 20 மில்லி மஞ்சள் நிற திரவம் வேறு நெடியின்றி காணப்பட்டது. சவ்வு சீராக இருந்தது. கல்லீரல், மண்ணீரல், சீறுநீரகம் ஆகியன வெளிறியிருந்தது. சிறுநீர்பையில் 30 மில்லி சிறுநீர் காணப்பட்டது. நாவடிஎலும்பு, முதுகுதண்டுவடம் சீராக காணப்பட்டன.

பிரேத பரிசோதனையின்போது உடல் உள்ளுறுப்புகள் மற்றும் இரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு, இரசாயன பகுப்பாய்வுக்காக திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எனது பிரேத பரிசோதனையிலிருந்து, இறந்துபோன நபர் அவருடைய கழுத்து மற்றும் தலையில் ஏற்பட்டவெட்டுக்காயங்களினாலும், அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டதாலும் இறந்திருக்க வாய்ப்புள்ளது என முதற்கட்ட கருத்துரை வழங்கினேன். அது அ.சா.ஆ.26.

திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து 15.10.2020 அன்று வழங்கிய இரசாயன அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கை நீ.ம.சா.ஆ.1. அந்த அறிக்கையில் இறந்துபோனவரின் உடல் உள்ளுறுப்புகளில் நஞ்சு மற்றும் ஆல்கஹால் எதுவும் காணப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் 23.10.2020 அன்று பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.27.

22.01.2021 தேதியிட்டு குருதிவடிநீரியல் அறிக்கை திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்டது. அந்த அறிக்கை நீ.ம.சா.ஆ.2. அந்த அறிக்கையில் இறந்துபோனவரின் இரத்த வகை A பிரிவு என பெறப்பட்டிருந்தது.

மேற்சொன்ன அறிக்கைகள் மற்றும் எனது பிரேத பரிசோதனையிலிருந்து, இறந்துபோனவர் அவரது கழுத்து மற்றும் தலையில் ஏற்பட்ட வெட்டுக்காயங்களினாலும், இரத்தப்போக்கினாலும் இறப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றும், இறந்துபோனவரின் பிரேதத்தை குளிர்சாதன அறையில் வைப்பதற்கு முன்னர் 2 முதல் 6 மணி நேரத்திற்கு இறந்திருக்க வாய்ப்புள்ளது. எனது இறுதியறிக்கை அ.சா.ஆ.28.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படம் சா.பொ.1, 2 ஆயுதங்களால் இறந்துபோனவருக்கு நான் மேலே சொன்ன வெட்டுக்காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

<u>**1** முதல் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பொதுவாக காயம்பட்ட நபர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவுடன், அவருடைய இரத்தமாதிரி சேகரிப்பட்டு, இரத்தம் எந்தவகையை சேர்ந்தது என பரிசோதிக்கப்படும் என்றால் அவரது காயத்தின் தன்மையை பொறுத்து செய்யப்படும். காயம்பட்ட நபருக்கு இரத்தம் தேவைப்படும்போது, இரத்தம் செலுத்துவதற்காக இரத்தவகை கண்டறியப்படும். இவ்வழக்கில் இறந்துபோன நபரின் இறப்பிற்கு காரணம், இரத்தப்போக்கு மற்றும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி. இரத்தவகை கண்டறியப்படும்போது, அதன் விவரம் சிகிச்சை விவரக்குறிப்பில் பதிவு செய்யப்படும். நீ.ம.சா.ஆ.2 அறிக்கையின்படி, இறந்துபோனவரின் இரத்தம் A வகையை சேர்ந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்துபோனவரின் இரத்தம் O Negative வகையை சேர்ந்தது என அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பதிவு செய்துள்ளார் என்றால் அதுகுறித்து என்னால் கருத்துக்கூற .....

இயலாது. இறந்துபோனவரின் பிரேத விரைப்புத்தன்மை இறப்பிற்கு பின்னர் அரை மணி நேரத்தில் தொடங்கும் என்றால் சரியல்ல. எவ்வளவு நேரத்தில் மரண விரைப்புத்தன்மை ஆரம்பிக்கும் என்றால் நபரின் உடல்வாக்கை பொறுத்து பிரேத விரைப்புத்தன்மை தொடங்கும். இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என்பவரின் உடல்வாகு பொறுத்து, அவரது இறப்பிலிருந்து 6 மணி நேரத்திலிருந்து பிரேத விரைப்புத்தன்மை தொடங்குவதற்கு வாய்ப்புள்ளது. பொதுவாக இறந்துபோனவரின் பிரேதத்தின் விரைப்புத்தன்மை அவர் இறந்துபோன அரை மணி நேரத்தில் தொடங்கிவிடும் என்றால் சரியல்ல. 1 முதல் 12 வரையான காயங்கள், முகம் மற்றும் தலைப்பகுதியை சேர்ந்த காயங்கள். நான் சொன்ன வெட்டுக்காயங்களின் இரண்டு ஓரங்களும் நேர்த்தியாக இருந்தன. அந்த விவரத்தை எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். நேர்த்தியான வெட்டுக்காயங்கள் கூர்மையான ஆயுதத்தால் ஏற்படக்கூடியவை. காயம் எண்.2 வெட்டுக்காயம். அது வெட்டுக்காயம் என்பதால் நேர்த்தியானது. தலையில் ஏற்பட்டுள்ள காயங்கள் ஒவ்வொரு காயத்தின் தனித்தன்மையால் மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் அது ஒவ்வொரு காயத்தின் தன்மையை பொறுத்து அமையும். இறந்துபோனவரின் பிரேதம் எத்தனை மணிக்கு குளிர்சாதன அறையில் வைக்கப்பட்டது என எனது அறிக்கையில் நான் கூறவில்லை. பிணவறையிலிருந்து, எனது பிரேத பரிசோதனை அறைக்கு பிரேதம் 3.50 மணிக்கு வந்தது. குளிர்சாதன அறையில் பிரேதத்தை வைத்தவுடன் பிரேத விரைப்புத்தன்மை விரைவாக துவங்கும் என்றால் துவங்காது. இறந்துபோன பிரேதத்தில் பிரேதத்தின் வெப்பம் சோதனை செய்தேனா என்றால் அதற்கு அவசியமில்லை என்பதால் செய்யவில்லை. இறந்துபோனவரின் பிரேதம் குளிர்சாதன அறையில் இருந்த காரணத்தினால் பிரேதத்தில் விரைப்புத்தன்மை துவங்காது என்ற காரணத்தினாலும், பிரேதத்தின் இறப்பு நேரத்தை குறிப்பிடுகிறேன். பிரேத விரைப்புத்தன்மை துவங்க ஆரம்பிப்பது குறித்து நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில், மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-29** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர்.திரு.மகுடேஸ்வரன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 27th day of September 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். **1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல், **4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

நீதிமன்றக்காவலில் உள்ள **2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி உடல்நிலை சரியில்லாமல் திருச்சி**,** அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட காரணத்தினால்**,** அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய இயலவில்லை என திருச்சி மத்திய சிறை கண்காணிப்பாளர் க**.**எண்**. 481/**த**.**கு**.3/2023,** நாள்**. 27.09.2023** கடிதம் அனுப்பியுள்ளார்**.** மருத்துவமனையில் காணொலி வசதியில்லை**. 2** ம் எதிரி வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்**. 2** ம் எதிரி முன்னிலையில்லாமல்**,** சாட்சியம் பதிவு செய்ய ஆட்சேபனையில்லை என தெரிவித்ததின் அடிப்படையில்**,** சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**.**

**3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கரூர், அப்பல்லோ மருத்துவமனையில் தலைமை மருத்துவராக அவசர சிகிச்சை பிரிவில் பணிபுரிகிறேன். நான் கடந்த, 18.09.2020 அன்று காலை 9.15 மணியளவில் இதே மருத்துவமனையில், இதே பணியிலிருந்தபோது, கிருஷ்ணமூர்த்தி, வயது 26 உடைய ஆண் நபரை வெட்டுக்காயங்களுடன் தினேஷ் என்பவர் தன்னை அவருடைய சகோதரர் என அறிமுகப்படுத்தி, சிகிச்சைக்கு அழைத்து வந்தார். காயம்பட்ட நபர் மயக்க நிலையில் இருந்தார். அவர் உடன் வந்த தினேஷ் என்பவர் காயம்பட்ட நபரை இரு அடையாளம் தெரியாத நபர்கள் அருவாளால் இளநீர் கடை அருகில் வைத்து, சேலம் - கோவை பைபாஸ் ரோடு, ரவுண்டனா அருகில் காலை 9.00 மணியளவில் வெட்டியதாக கூறினார். காயம்பட்ட நபருக்கு இரத்த அழுத்தம் குறைவாக இருந்தது. அதிக இரத்தப்போக்கு இருந்தது. மூச்சுவிட சிரமப்பட்டார். அவருக்கு முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டது.

<u>அவரது உடலில் கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன:-</u>

1. அவரது உச்சந்தலையில் மண்டையோடு உடையும் அளவில் மூளை வெளியேறிய நிலையில் 10 x 5 x 7 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

2. கழுத்துப்பகுதியில் எலும்பு தெரியும் அளவிற்கு வலது காது வரை தோல்பகுதி 15 x 5 x 7 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

3. அவருடைய தலையில் நிறைய வெட்டுக்காயங்கள் காணப்பட்டது.

4. இடது கை மணிக்கட்டு விழுந்துவிடும் அளவிற்கு வெட்டுப்பட்டிருந்தது.

5.இடது கை தோல் திசுக்கள் இரத்தநாளங்கள் தெரியும் அளவிற்கு வெட்டப்பட்டிருந்தன.

6. வலது உள்ளங்கை மணிக்கட்டு பகுதியில் ஆழமான வெட்டுக்காயம் 5 x 5 x 2 cm அளவில் காணப்பட்டது.

7. முகத்தில், இடதுபுற கன்னத்தில் ஆழமான 10 x 2 x 5 அளவில் காணப்பட்டது.

8. 5 x 3 x 2 cm அளவில் கீழ் உதட்டு பகுதியில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

9. முதுகுபகுதியில் வலது, இடது தோள்படையில் 5 x 2 x 2 cm அளவில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன.

10. வலது தொடையின் பின்பகுதியில் 5 x 2 x 4 cm அளவில் காயம் காணப்பட்டது.

அவருக்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டது. இரத்தக்கசிவு அதிகமாக இருந்ததால், இரத்த அழுத்தம் உயரவில்லை. அவரது தலை, நெஞ்சு, வயிறு ஆகிய பகுதிகளில் ஸ்கேன் செய்து பார்க்கப்பட்டது. தலையிலும், நுரையீரலிலும், ஆழமான இரத்தக்கசிவு இருப்பது உறுதி செய்யப்பட்டது. மேற்சொன்ன

காயம்பட்ட நபர் 10.50 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துபோனார். அவருடைய பிரேதத்தை, பிரேத பரிசோதனைக்காக கரூர், அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

மேற்சொன்ன நபரை சிகிச்சைக்கு சேர்த்தபோது நான் பதிவு செய்த சிகிச்சை ஆவணங்கள் அ.சா.ஆ.29.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

நான் சொன்ன வெட்டுக்காயங்கள் சா.பொ.1, 2 ஆயுதங்களால் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

**1** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

காயம்பட்ட நபர் மருத்துவமனைக்கு கொண்டு வரும்போதே, இரத்தம் அதிகளவில் வெளியேறிய நிலையில் கொண்டு வரப்பட்டார். காயம்பட்ட நபரின் சிகிச்சை துவங்கும்போது, அவரது இரத்த வகை குறித்து பரிசோதனை செய்ய வேண்டும். அ.சா.ஆ.29 சிகிச்சை ஆவணத்தில், காயம்பட்டவரின் இரத்தவகை O நெகட்டிவ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் O நெகட்டிவ் இரத்தவகை யாருக்கு வேண்டுமானாலும் செலுத்தலாம் என்பதால் சேமித்து வைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. காயம்பட்ட நபரின் இரத்தவகை என்றால் இரத்தவகை என்ன என்று கண்டறிவதற்கு அனுப்பியுள்ளோம். காயம்பட்ட நபர், மரணம் ஏற்படும் வரை இரத்தவகை கண்டறியப்பட்டு வரவில்லை என்றால் பொதுவாக இரத்தவகை கண்டறியப்படுவதற்கு ஒருமணி நேரமாகும். கிருஷ்ணமூர்த்தி என்பவரின் இறப்பை பரிசோதித்து, நான்தான் உறுதிசெய்தேன் என்றால் எனது உதவி மருத்துவர் விக்னேஷ்வரன் உறுதி செய்தார். இறந்துபோனவரின் இறப்புச்சான்றிதழை தினேஷ் என்பவரிடம் ஒப்படைத்தேன். கிருஷ்ணமூர்த்தி என்பவரை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதல் அவர் இறக்கும்வரை தினேஷ் என்பவர் உடனிருந்தார்.

மற்ற எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-30** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சேகர் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 27th day of September 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல், **4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

நீதிமன்றக்காவலில் உள்ள **2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி உடல்நிலை சரியில்லாமல் திருச்சி**,** அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட காரணத்தினால்**,** அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய இயலவில்லை என திருச்சி மத்திய சிறை கண்காணிப்பாளர் க**.**எண்**. 481/**த**.**கு**.3/2023,** நாள்**. 27.09.2023** கடிதம் அனுப்பியுள்ளார்**.** மருத்துவமனையில் காணொலி வசதியில்லை**. 2** ம் எதிரி வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்**. 2** ம் எதிரி முன்னிலையில்லாமல்**,** சாட்சியம் பதிவு செய்ய ஆட்சேபனையில்லை என தெரிவித்ததின் அடிப்படையில்**,** சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**.**

**3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் வருவாய்த்துறையில் வட்டாட்சியராக பணிபுரிந்து, ஓய்வு பெற்று, சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் வசித்து வருகிறேன். கடந்த 07.11.2020 அன்று தேவக்கோட்டை வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தபோது, கரூர் உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோளின்படி, சிவகங்கை மாவட்டம், ஆராவயல் கிராமத்தை சேர்ந்த சண்முகம் மகன் பிரேம்குமார் என்பவர் இந்து, கள்ளர் வகுப்பைச்சேர்ந்தவர் என சாதிச்சான்று அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.30. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், மண்டல துணை வட்டாட்சியர் ஆகியோருடன் சென்று, கிராமத்தில் உள்ளவர்களிடம் நேரில் விசாரித்து, அறிக்கை வழங்கினேன். அ.சா.ஆ.30 ஆவணம் நான் வழங்கவில்லை என்றும், வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-31** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சக்திவேல் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 27th day of September 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். **1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல், **4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

நீதிமன்றக்காவலில் உள்ள **2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி உடல்நிலை சரியில்லாமல் திருச்சி**,** அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட காரணத்தினால்**,** அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய இயலவில்லை என திருச்சி மத்திய சிறை கண்காணிப்பாளர் க**.**எண்**. 481/**த**.**கு**.3/2023,** நாள்**. 27.09.2023** கடிதம் அனுப்பியுள்ளார்**.** மருத்துவமனையில் காணொலி வசதியில்லை**. 2** ம் எதிரி வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்**. 2** ம் எதிரி முன்னிலையில்லாமல்**,** சாட்சியம் பதிவு செய்ய ஆட்சேபனையில்லை என தெரிவித்ததின் அடிப்படையில்**,** சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**.**

**3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில், நேர்முக உதவியாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த, 02.10.2020 அன்று கடவூர் வட்டாட்சியராக பணிபுரிந்தபோது, கரூர் காவல்துணை கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோளின்படி, கடவூர் வட்டம், காளைப்பட்டி கிராமம் மற்றும் கஸ்பா என்ற முகவரியில் வசித்து வரும் அஜீத், த/பெ. மணி என்பவர் இந்து, சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த ஊராளி கவுண்டர் சாதியை சேர்ந்தவர் என துணைவட்டாட்சியர் அறிக்கையின் அடிப்படையில், சாதிச்சான்று அறிக்கை வழங்கினேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.31. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**9** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க விசாரணை செய்யாமல் அ.சா.ஆ.31 அறிக்கை வழங்கினேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.